இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"நாம் அனைவரும் இணைந்து உழைப்போம்; எப்போதும் இத்தகைய ஒரு திருஅவையாக இருக்க பாடுபடுவோம்: நீதி, அமைதி மற்றும் அன்பு நிறைந்த ஒரு திருஅவையாக"
திருத்தந்தை.

# 'உண்மையான அன்பு என்ற பசியோடு நான் வந்தேன்'



காஸ்தெல் காந்தோல்ஃபோவில் (Castel Gandolfo) உள்ள திருத்தந்தையின் தோட்டங்களான 'பொர்கோ லவ்டாதோ சி' (Borgo Laudato si') வளாகத்தில், வறுமையிலும் சமூகத்தில் நலிவடைந்த நிலையிலும் வாழும் சுமார் 200 மக்களுடன் நடைபெற்ற ஒரு சிறப்பு "திருத்தந்தையுடன் மதிய உணவு" நிகழ்வில், திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள் தான் "நீதிக்கான பசியோடும்", "உண்மையான அன்புக்கான பசியோடும்" இங்கு வந்துள்ளதாகக் கூறினார். மேலும், நீதி, அமைதி மற்றும் அன்பு நிறைந்த ஒரு திருஅவையைக் கட்டியெழுப்ப அவர் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

"நான் எந்த ஒரு ஆயத்த உரையும் இல்லாமல் வந்தேன், ஆனால் நான் பசியோடு வந்தேன் — நீதிக்கான பசி, உண்மையான அன்புக்கான பசி, தன் கதவுகளைத் திறந்து எல்லாரையும் வரவேற்று ஏற்றுக்கொள்ளத் தெரிந்த ஒரு திருஅவைக்கான பசி; அங்கே எல்லார்மீதும் அன்பு இருக்கும், யாரும் எதிரியாக இருக்க மாட்டார்கள், நாம் அனைவரும் ஒப்புரவு, மன்னிப்பு மற்றும் அமைதியை வாழ்ந்து காட்டத் தெரிந்திருக்கும் ஒரு திருஅவைக்கான பசி".

இந்த வார்த்தைகளுடன், திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள், இந்தச் சிறப்பு மதிய உணவு நிகழ்விற்காகக் கூடியிருந்த மக்களை வாழ்த்தி வரவேற்றார்.

### ஏழை எளியோருடன் திருத்தந்தையின் மதிய உணவு: சமூகங்களின் பலமாக மாறும் பலவீனம்

இந்த நிகழ்வில், ரோம் மறைமாவட்டம் மற்றும் அதன் சார்புடைய தொண்டு நிறுவனங்களால் அழைத்து வரப்பட்ட, நலிவடைந்த சூழ்நிலையில் வாழும் சுமார் 40 குழந்தைகள் உட்பட 200 பேர் கலந்து கொண்டனர். வந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் இந்த 'பொர்கோ லவ்தாத்தோ சி' முன்முயற்சியின் அழகிலும் ஆன்மீகத்திலும் மூழ்கி இந்த நாளைக் கழித்தனர்.

### எல்லா மக்கள் மீதும் கடவுள் கொண்டுள்ள அன்பு

"நீங்களே நன்கு அறிந்தது போல, திருத்தந்தையின் பட்டப்பெயர்களில் ஒன்று 'போண்டிஃப்' (Pontiff) — அதாவது 'பாலம் கட்டுபவர்' என்பதாகும்" என்று அவர் கூறினார். "இன்று நாமும் உங்கள் அனைவரோடும், உங்கள் குடும்பங்களோடும், நாம் வாழ விரும்பும் இந்தச் சமூகத்தோடும் ஒரு பாலத்தைக் கட்டியெழுப்ப விரும்புகிறோம் — அது நீதி நிறைந்த ஒரு சமூகம்; அங்கே வறுமைக்கான காரணங்கள் ஒழிக்கப்பட வேண்டும், நம் உலகில் இன்னும் நீடிக்கும் அநீதிகளுக்கான காரணங்கள் வெல்லப்பட வேண்டும்".

### நம்மிடையே வாழும் இயேசு

"நாம் எப்பொழுதெல்லாம் ஒன்றாகக் கூடுகிறோமோ, எப்பொழுதெல்லாம் ஒரே மேசையைச் சுற்றி இந்த சந்திப்பின் உணர்வைப் பகிர்ந்து கொள்கிறோமோ — அந்த ஒரே மேசையில் இயேசுவும் நம்மிடையே பிரசன்னமாகியிருக்கிறார். அப்போதெல்லாம் நாம் ஒரு மாறுபட்ட உலகை, ஒரு நம்பிக்கையின் உலகை, நம் மத்தியில் ஒளிரும் ஒரு ஒளியின் உலகை உண்மையிலேயே கட்டியெழுப்புகிறோம்" என்று திருத்தந்தை லியோ கூறினார்.

### பிளவுபட்ட உலகில் நம்முடைய அழைப்பு

"பல நேரங்களில், நமது உலகம் வன்முறை, வெறுப்பு மற்றும் பாகுபாடுகளால் பிளவுபட்டுள்ளது" என்பதைக் குறிப்பிட்ட திருத்தந்தை லியோ, எல்லாரும் சமூகங்களாக ஒன்றிணைந்து, ஒருவருக்கொருவர் ஆதரவாகவும், பரஸ்பர அக்கறையோடும் வாழ ஊக்குவித்தார்.

"நாம் அனைவரும் இணைந்து உழைப்போம்; எப்போதும் இத்தகைய ஒரு திருஅவையாக இருக்க பாடுபடுவோம்: நீதி, அமைதி மற்றும் அன்பு நிறைந்த ஒரு திருஅவையாக" என்று அவர் வலியுறுத்தினார்.

அனைவரையும் உணவருந்த அழைப்பதற்கு முன், திருத்தந்தை கூடியிருந்தவர்களுக்காகவும், அவர்களது குடும்பங்களுக்காகவும், துன்புறும் அனைவருக்காகவும் ஒரு ஆசிர்வாத ஜெபத்தை ஏறெடுத்தார்:

"ஆண்டவரே, உமது ஆசிர்வாதம் எங்கள் மீதும், எங்களில் ஒவ்வொருவர் மீதும், பல கொடையாளர்களின் தாராள மனதால் நாங்கள் இப்பொழுது பகிர்ந்து கொள்ளவிருக்கும் இந்த உணவின் மீதும் இறங்கி வருவதாக. எங்கள் குடும்பங்களை ஆசீர்வதியும். கஷ்டத்திலும் துன்பத்திலும் இருக்கும் அனைவரையும் ஆசீர்வதியும்".

"அவர்களும் அமைதியையும், மன்னிப்பையும், ஒப்புரவையும் கண்டுகொள்வார்களாக. ஆண்டவரே, எங்களையும், உமது பராமரிப்பிலிருந்து நாங்கள் பெற்றுக்கொள்ளும் இந்த கொடைகளையும் ஆசீர்வதியும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்" என்று திருத்தந்தை லியோ ஜெபத்தை நிறைவு செய்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# உலக முதியோர் தினத்தையொட்டி திருத்தந்தையின் செய்தி

அன்பான சகோதர சகோதரிகளே,

ஆண்டவர் நம்மை ஒருபோதும் மறக்க மாட்டார் என்ற வாக்குறுதியை இறைவாக்கினர் எசாயா வழியாக நமக்கு அளிக்கிறார். நம்முடைய முகங்களை அவர் உள்ளங்கைகளில் பொறித்து வைத்துள்ளார் என்றும் (எசா 49:16), அவரது அன்பு ஒரு தாய் தன் குழந்தையின் மீது காட்டும் அன்பை விடப் பெரியது என்றும் (எசா 49:15) நமக்கு உறுதி அளிக்கிறார். கடவுள் தம்மோடு நெருக்கமான உறவு கொண்டுள்ள ஒவ்வொரு மனிதரிடமும், ஒட்டுமொத்த மக்களிடமும் எவ்வளவு அக்கறையோடு பேசுகிறார் என்பதை இந்த இறைவாக்கினர் நமக்குக் காட்டுகிறார். இன்று கூட, இந்த வார்த்தைகள் நம் ஒவ்வொருவருக்கும் சொல்லப்பட்டவை என்பதை நாம் உணர்ந்து, “நான் உன்னை ஒருபோதும் மறக்க மாட்டேன்” என்று கடவுள் நம்மிடம் நேரடியாகக் கூறுவதை நாம் கேட்க முடியும்.

எவரையும் மறக்காத கடவுளின் அன்பு, மனித வாழ்க்கை பெரும்பாலும் சந்திக்கும் தனிமைக்கும், அடையாளமற்ற நிலைக்கும் எதிராக வழங்கப்படும் நீதியாகவும், பதிலாகவுமே அமைகிறது. குறிப்பாக, பல முதியவர்களின் வாழ்க்கை அவர்களின் முகங்களை மறைத்து, அவர்களை மறதி என்னும் இருளுக்குள் தள்ளிவிடும் ஒரு திரையால் மூடப்பட்டது போலத் தோன்றுகிறது. தனிமை ஆட்சி செய்யும் வீடுகளிலும், ஒவ்வொரு மனிதரின் தனித்தன்மையும் வெறும் படுக்கை எண்ணாகவோ அல்லது நோயின் பெயராகவோ சுருக்கப்படும் முதியோர் இல்லங்களிலும் இதுதான் நடக்கிறது.

தாத்தா பாட்டி மற்றும் முதியவர்களுக்கான உலக நாள் கொண்டாட்டம் என்பது, திருஅவை அனைவருக்கும் ஒரு தாயாக இருக்க அழைப்பு பெற்றுள்ளது என்பதையும், எந்த வயதிலும் நாம் கடவுளின் பிள்ளைகளாக வாழ முடியும் என்பதையும் மீண்டும் கண்டறிவதற்கான ஒரு நல்வாய்ப்பாகும். எனவே, இந்நாள் அனைவருக்கும், குறிப்பாக இளைஞர்களுக்கு, தங்களது தாத்தா பாட்டிகளையும், குடும்பத்தில் உள்ள முதியவர்களையும், அதேபோல் தங்களைப் பார்க்க யாரும் இல்லாத முதியவர்களையும் நேரில் சென்று சந்திக்கும் அழகான வழக்கத்தை மீண்டும் உயிர்ப்பிக்க ஒரு தூண்டுதலாக அமையட்டும். இந்தச் செய்தியின் வழியாகவும், உங்கள் வருகையின் வழியாகவும், திருத்தந்தையின் நெருக்கத்தையும் அன்பையும் அவர்களிடம் கொண்டு சேருங்கள். இறைவாக்கினரின் “நான் உன்னை ஒருபோதும் மறக்க மாட்டேன்” என்ற வார்த்தைகள், பாசமும் பரிவும் நிறைந்த ஒரு சந்திப்பாக மாற நீங்கள் வழிவகை செய்யுங்கள்.

“வேகமும் பிரிவினைகளும் நிறைந்த இந்தத் தற்கால யுகத்தில், மனித உள்ளம் இன்னும் தம்மீது அக்கறை காட்டும் உள்ளங்களையும், கனிவான வார்த்தைகளையும், மென்மையான கரங்களையும் தேடி ஏங்குகிறது. டிஜிட்டல் கலாச்சாரம் தொடர்புகளைப் பெருக்கி, பேசுவதற்கான புதிய வழிகளைத் தந்தாலும், மனித இதயம் உண்மையான நெருக்கத்திற்கான தேவையைக் கொண்டிருக்கிறது” (சுற்றுமடல், மகிழ்வூட்டும் மனிதநேயம் - Magnifica Humanitas, 239).

திருஅவை தன் முதிய பிள்ளைகளின் துன்பங்களைப் புரிந்து கொள்கிறது; அவர்கள் பெரும்பாலும் சுமையாகக் கருதப்படுவதையும், இந்த உலகம் அவர்களைத் தவறான கண்ணோட்டத்தோடு பார்ப்பதையும் அது நன்கு அறியும். லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட பொருளாதாரம் குடும்ப உறவுகளைப் பலவீனப்படுத்துகிறது என்பதையும்; பிள்ளைகள் வேலை தேடி வெளிநாடுகளுக்குச் செல்வதாலோ அல்லது போர்களில் போரிட வேண்டிய கட்டாயத்தினாலோ, பல முதியவர்கள் தனித்து விடப்படுகிறார்கள் என்பதையும் திருஅவை உணர்ந்துள்ளது. இந்த ஒவ்வொரு காரணத்திற்காகவும், “ஆண்டவர் உன்னை ஒருபோதும் மறக்க மாட்டார்!” என்ற வாக்குறுதியை அது மகிழ்ச்சியோடு பிரகடனம் செய்கிறது.

பலருக்கு, கடவுளின் கனிவை உணரும் நல்வாய்ப்பு அவர்களின் வாழ்க்கைப் பயணத்தின் இறுதியில், சில சமயம் கடைசி கட்டங்களில் கூட ஏற்படுகிறது. உண்மையில், கடந்த காலத்தைப் போலல்லாமல், இன்று உண்மையான விசுவாச அநுபவம் இல்லாமலேயே பலர் முதுமையைத் தொடுவது அதிகமாகி வருகிறது. இத்தகையச் சூழலில், முதுமைக்காலத்தின் கேள்விகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில், ஆன்மீக வாழ்வைத் தொடங்க அல்லது மீண்டும் புதுப்பிக்க இதுவே தகுந்த நேரமாக மாறும். இந்த புதிய பயணத்தில், புனித அகஸ்தினார் கூறுவது போல, கடவுளை நாம் ஒரு தாயாகப் பார்க்கலாம்: “அவர் நம்மை அரவணைக்கிறார், நமக்கு உணவளிக்கிறார், நம்மைப் பராமரிக்கிறார், நம்மைப் பாதுகாக்கிறார், எனவே அவர் ஒரு தாய்” (திருப்பாடல் உரை 27, II, 18). இந்த உணர்வு நமது பலவீனத்தைக் கண்டு நாம் வெட்கப்படாமல் இருக்க உதவுகிறது. அதோடு, நாம் எப்போதும் ஒருவருக்கொருவர் தேவையாய் இருக்கிறோம் என்பதையும், பிறரின் அக்கறையும் கவனிப்பும் நமக்குத் தேவை என்பதையும் புரிய வைக்கிறது. நம்மிடம் நெருங்கி வரும் கடவுளை, அவருடைய கனிவு நாம் அடையாளம் கண்டு, இப்போது அவரிடம் பிள்ளைகளுக்குரிய நம்பிக்கையோடு ஜெபிக்கலாம். அவரிடம் திரும்புவதற்கு எப்போதும் காலம் கடந்து போவதில்லை. அது அனைவருக்கும் ஒரு பெரிய கொடையாகும்.

கிறிஸ்தவர்களாக நாம் நம் முதுமையை இப்படித்தான் வாழ வேண்டும்: “பலவீனமானவர்களாக” இருந்தாலும், அதே நேரத்தில் இறைவனால் “அழைக்கப்பட்டவர்களாக” வாழ வேண்டும். ஒரு ஆணும் பெண்ணும் முதுமையிலும் மறுபடி பிறக்க முடியும் (cf. யோவா 3:4-6) மற்றும் இறைவாக்கினரோடு சேர்ந்து இவ்வாறு முழங்க முடியும்: “மனம் மாறி அமைதியாய் இருப்பதில்தான் நீங்கள் விடுதலையடைவீர்கள்; அமைதியோடும் நம்பிக்கையோடும் இருப்பதில்தான் உங்கள் வலிமை அடங்கியுள்ளது” (எசா 30:15). தங்கள் பேரக் குழந்தைகள் வளரப் போகும் உலகம் எப்படி இருக்குமோ என்று பலர் கவலைப்படுகிறார்கள். என் அன்பான நண்பர்களே, உலகம் முழுவதும் விரைவில் அமைதி நிலவ என்னோடு சேர்ந்து ஆவலோடு ஜெபிக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்பான முதிய சகோதர சகோதரிகளே, ஒவ்வொரு நாளும், குறிப்பாக நீங்கள் புனித ஜெபமாலையைத் (ரோசரி) துதிக்கும் போது, உங்கள் ஜெபங்களால் எனக்கு ஆதரவளிப்பதற்காக உங்களுக்கு நன்றி கூறுகிறேன். இந்த நன்றியை என் இதயத்தின் ஆழத்திலிருந்து உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், அத்தோடு இந்த ஜெபத்தை உங்களுக்கு ஆசியாக வழங்குகிறேன்: நம்மை ஒருபோதும் மறக்காத ஆண்டவர், விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலும் நம்மை எப்போதும் புதுப்பிப்பாராக!

திருத்தந்தை லியோ
தமிழாக்கம் ஹெரால்டு

## இறைவன்

இரக்கமுள்ள இறைவா
பாவ நாட்டத்தில்
மனம் செல்லாமல்
உன் தூய அன்பினால்
என்னை நிரப்பும்!

இறைவா உன் திரு உள்ளத்தால்
கோபம் என்ற கிண்ணத்தை என்னிடம் இருந்து
அகற்றியருளும்!

அகந்தை என்ற கிரீடம்
எனக்கு வேண்டாம்
பொறுமை என்ற
தாழ்ச்சியை தந்தருளும்!

பல நேரங்களில்
கோபம் என்ற புதைக்குளிக்குள்
விழுகிறேன்!

உன் முள் கிரீடம்
எனக்கு அரணாக
அமையட்டும்!

ரோஸ்லின் காஜாங்

# திருமணம் மற்றும் பெற்றோரின் அழைப்பு



2026 ஜூன் 20 ஆம் தேதி, ஸ்தாபக் நல்லாயன் பங்கின் தமிழ் அப்போஸ்தலர் குழு ஏற்பாடு செய்த குடும்ப வாழ்வு உருவாக்கப் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் நோக்கம், கிறிஸ்தவ குடும்பங்கள் திருமண வாழ்வின் அடிப்படையை ஆழமாக உணர்ந்து, இறைவனை மையமாகக் கொண்ட குடும்ப வாழ்வை அமைத்து, இன்றைய சவாலான உலகில் நற்குணமிக்க பிள்ளைகளை வளர்ப்பதற்கான வழிகாட்டுதலை வழங்குவதாகும்.

முதல் அமர்வில் "திருமணம் மற்றும் பெற்றோரின் அழைப்பு" என்ற தலைப்பில், திருமணம் என்பது ஒரு உடன்படிக்கை மட்டுமல்ல; அது இறைவன் அளித்த புனித அழைப்பு என்பதை விளக்கினர்.

கணவன்–மனைவி அன்பு, அர்ப்பணிப்பு, பொறுப்பு மற்றும் பரஸ்பர மரியாதையுடன் குடும்பத்தை உருவாக்க அழைக்கப்பட்டுள்ளனர் என்பதை வலியுறுத்தினர். பெற்றோர், தங்கள் பிள்ளைகளின் முதல் ஆசிரியர்களாகவும், விசுவாசத்தின் முன்னுதாரணங்களாகவும் இருப்பதன் முக்கியத்துவத்தையும் பகிர்ந்து கொண்டனர்.

இரண்டாம் அமர்வில் "கிறிஸ்துவில் வேரூன்றிய குடும்பம் & ஜெபமும் திருச்சடங்குகளும்" என்ற தலைப்பில், குடும்ப ஜெபத்தின் அவசியம், திருப்பலியில் தொடர்ந்து பங்கேற்பது, திருவருட்சாதனங்களைப் பெறுதல் மற்றும் இறைவனின் வார்த்தையை குடும்ப வாழ்வில் நடைமுறைப்படுத்துதல் குறித்து ஊக்கமளிக்கும் வகையில் எடுத்துரைக்கப்பட்டது.

ஜெபம் குடும்பத்தை ஒன்றிணைத்து, இறைவனின் அருளில் நிலைத்திருக்க உதவுகிறது என்பதை பேச்சாளர்கள் நினைவூட்டினர்.

மூன்றாம் அமர்வில் "சவால்கள் நிறைந்த உலகில் நற்குணமிக்க பிள்ளைகளை வளர்ப்பது" என்ற தலைப்பில், தொழில்நுட்பம், சமூக ஊடகங்கள் மற்றும் சமகால சமூக மாற்றங்கள் மத்தியில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ விழுமியங்களோடு வளர்ப்பதற்கான நடைமுறை வழிமுறைகள் பகிரப்பட்டன.

அன்பு, ஒழுக்கம், திறந்த உரையாடல், நல்ல முன்மாதிரி மற்றும் இறைநம்பிக்கை ஆகியவை குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான அடித்தளங்கள் என்பதை வலியுறுத்தினர்.

பேச்சாளர்களான பிரான்சிஸ் மற்றும் ஜாஸ்மின் அவர்கள், தங்களது வாழ்க்கை அனுபவங்களையும் திருச்சபையின் போதனைகளையும் இணைத்து, குடும்பங்கள் எளிதில் நடைமுறைப்படுத்தக்கூடிய கருத்துக்களைப் பகிர்ந்தனர். பங்கேற்ற அனைவரும் இப்பயிற்சியின் மூலம் புதிய ஊக்கத்தையும், குடும்ப வாழ்வை மேலும் இறைமையமாகவும் உறுதியானதாகவும் மாற்றும் உறுதிப்பாட்டையும் பெற்றனர்.

இத்தகைய உருவாக்கப் பயிற்சிகள், குடும்பங்களை கிறிஸ்துவில் வேரூன்றிய, அன்பு நிறைந்த மற்றும் விசுவாசத்தில் வளர்ந்த குடும்பங்களாக உருவாக்குவதற்கு முக்கிய பங்காற்றுகின்றன.

லோரா ஜோசப்

துணுக்குகள் – திருவிழாக் கொண்டாட்டங்களின்போது நாம் தகுதியான முறையில் நற்கருணை உட்கொண்டு, இறைமகிழ்ச்சியில் முழுமையாகப் பங்கேற்க, ஒப்புரவு அருட்சாதனம் நம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும். இத்திருவருட்சாதனம் நமக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள பாவத் தடைகளை நீக்கி, நம் ஆன்மாவின் காயங்களை ஆற்றி, சோதனைகளை வெல்லும் தெய்வீக ஆற்றலைத் தருவதோடு, பலிபீடத்தை அணுகும் முன் இறைவனுடனும் பிறருடனும் ஒப்புரவாக வேண்டும் என்ற இயேசுவின் கட்டளையை நாம் நிறைவேற்றவும் உதவுகிறது.

# மலேசியா, சிங்கப்பூர், புருணை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை (CBCMSB)

## புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா (2026)

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

இந்த ஆண்டு, புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா ஆகஸ்ட் 15, 2026 (சனிக்கிழமை) அன்று வருகிறது. இந்த விண்ணேற்பு பெருவிழாவும், அதற்கு அடுத்த நாளான ஆகஸ்ட் 16 ஞாயிற்றுக்கிழமையும் கடன் திருநாட்கள் ஆகும்.

இருப்பினும், மக்களின் ஆன்மீக நன்மைகளைக் கருத்தில் கொண்டு (Pastoral reasons), மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை பிராந்திய வழிபாட்டு முறை ஆணையத்துடன் ஆலோசனை செய்து — விண்ணேற்பு பெருவிழா வழிபாட்டை ஆகஸ்ட் 16, 2026 ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியுள்ளது.

எனவே, வரும் இறுதியில் (சனிக்கிழமை மாலை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) நிறைவேற்றப்படும் திருப்பலிகள் அனைத்தும் அன்னை மரியாவின் விண்ணேற்பு பெருவிழா திருப்பலிகளாகவே கொண்டாடப்படும். இதில் பங்கேற்பதன் மூலம் நீங்கள் கடன் திருநாள் கடமையை நிறைவேற்றலாம்.

## அனைத்துப் புனிதர் பெருவிழா மற்றும் கிறிஸ்மஸ் பெருவிழா 2027

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

அடுத்த ஆண்டு (2027), அனைத்துப் புனிதர் பெருவிழா நவம்பர் 1, 2027 திங்கட்கிழமை அன்று வருகிறது. இந்த பெருவிழா நமது பகுதியில் ஒரு கடன் திருநாள் (கட்டாயத் திருப்பலி நாள்) ஆகும்.

இருப்பினும், மக்களின் ஆன்மீக நன்மைகளைக் கருத்தில் கொண்டு (Pastoral reasons), மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை பிராந்திய வழிபாட்டு முறை ஆணையத்துடன் ஆலோசனை செய்து, அனைத்துப் புனிதர் பெருவிழா வழிபாட்டை அக்டோபர் 31, 2027 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாகவே மாற்றி கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

எனவே, தயவுசெய்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிபாட்டு அட்டவணையைக் குறித்துக் கொள்ளவும்:

- அக்டோபர் 30, 2027 சனிக்கிழமை: அன்று மாலை நடைபெறும் (Sunset Masses) திருப்பலிகள் அனைத்தும் அனைத்துப் புனிதர் பெருவிழா திருப்பலிகளாகக் கொண்டாடப்படும்.
- அக்டோபர் 31, 2027 ஞாயிற்றுக்கிழமை: அன்று நடைபெறும் அனைத்து திருப்பலிகளும் அனைத்துப் புனிதர் பெருவிழா திருப்பலிகளாகவே கொண்டாடப்படும்.
- நவம்பர் 1, 2027 திங்கட்கிழமை: அன்று நடைபெறும் திருப்பலிகள் யாவும் ஆண்டின் பொதுக்காலம் 31-ஆம் வாரத்தின் சாதாரண நாள் திருப்பலி வழிபாட்டைப் பின்பற்றி நடைபெறும்.

மேலும், டிசம்பர் 25, 2027 சனிக்கிழமை அன்று வரும் கிறிஸ்மஸ் (இயேசு பிறப்பு) பெருவிழா வழிபாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆண்டவரின் அளவற்ற ஆசீர்வாதங்கள் உங்களுக்குக் கிடைக்க வாழ்த்துகிறேன்.

+ William Cardinal Goh

+ வில்லியம் கர்தினால் கோ (H. Em William Cardinal Goh)
தலைவர், பிராந்திய வழிபாட்டு முறை ஆணையம்
(Episcopal Regional Liturgy Commission)

# ஞானத்தின் நிறைவு விண்ணகம்

1 அரசர் 3: 5,7-12, உரோ 8:28-30, மத் 13:44-52

கடந்த ஞாயிறு வாசகங்களும் இன்றைய வாசகங்களும் ஞானம் பற்றி பேசுகின்றன. இன்றைய முதல் வாசகத்தில், வாழ்க்கைக்குத் தேவையானதைக் கேள் என்ற கடவுளின் கேள்விக்கு சாலமோன் அரசன் பதில் கொடுக்கிறார். இரண்டாவது வாசகத்தில், நாம் அனைவரும் கிறிஸ்துவின் சாயலைக் கொண்டிருக்க வேண்டும் என்று புனித பவுல் விரும்புகிறார். வாழ்க்கை ஓட்டத்தில் நாம் அனைவரும் தேடும் படலத்தில் ஈடுபட்டுள்ளோம் என நற்செய்தி கூறுகிறது.

உண்மைதான், அன்றாட வாழ்வின் தேவையை பொருட்டு அவரவர் தேடல் அமையும். வாழ்க்கை பயணத்தில் தேடல் எப்போதும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். காலத்திற்கும் வயதுக்கும் ஏற்ப தேடல் மாறுமே தவிர, நின்று விடாது. வாழ்க்கையில் தேடல் இல்லாவிட்டால் தேங்கிய நீரைப்போல நாற்றம் அடிக்கத் தொடங்கிவிடும். தேடல் உள்ளவரை வாழ்வில் ருசி இருக்கும்.

சாலமோன் அரசனுக்கு நல்லாட்சி வழங்க வேண்டும் என்றத் தேடல் இருந்தது. கிறிஸ்துவர்களை இறைமாட்சியில் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்ற தேடல் புனித பவுலுக்கு இருந்தது. இன்று நமக்கு, வாழ்க்கையின் தேடல் என்ன? நமது சிந்தனையில் வருவதெல்லாம் சில அடிப்படை தேவைகள். நன்றாக படிக்க வேண்டும், நல்ல வேலையில் அமர வேண்டும், வீடு வாங்க வேண்டும், பிள்ளைகளை நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும் ஆகிய இவ்வகையான எண்ணங்கள் சராசரி மனிதனின் தேடல்கள்.

அரசராக அரியணையில் சாலமோன் அமர்ந்த போது அவருக்கு சுமார் 15 வயது இருக்கும் எனக் கூறப்படுகிறது. அந்த இளம் வயதில் தமது தந்தை தாவீதைப் போல நல்லாட்சிக்குத் தருவதற்கு தமக்குள்ள குறைபாடுகளை அறிந்த சாலமோன், கடவுளை தேடி நாடினார். பொன்னையோ பொருளையோ கேளாமல், ஞானத்தைக் கேட்டார் சாலமோன். "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்; தூயவராகிய அவரைப் பற்றிய உணர்வே மெய்யுணர்வு" (நீமொ.9:10). கடவுள் ஒருவரே தூயவர் (1சாமு.2:2). கடவுள் யார் என்று அறிந்து அவர் மீது பயம் கலந்த மரியாதை (இறையச்சம்) வைக்கும் போதுதான் உண்மையான ஞானத்தைக் கண்டுணர முடியும். கடவுளின்றி அறநெறியில் வாழ முடியாது என்பதால் ஞானம் கடவுளோடு தொடர்புடையது.

ஞானம் நிறைந்த கடவுளின் பிரசன்னத்தை முழுமையாக கொண்ட இடம், முகம் முகமாய் அவரைத் தரிசிக்கும் இடம், விண்ணகம் (மத்.5:8; 1கொரி.13:12; திவெ.22:4). நிலத்தில் புதைந்திருக்கும் புதையலுக்கு ஒப்பாகும் விண்ணகத்தை அடைய, நமக்குள்ள அனைத்தையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். கடலில் இருந்து எடுக்கப்படும் நல்முத்துவுக்காக நமக்குள்ளதை விற்று விடத் தயாரக இருக்க வேண்டும் என இயேசு கூறுகிறார். இவ்வுலகில் நமக்கிருக்கும் எல்லாவற்றையும் விட மிக மதிப்புள்ள விண்ணகத்தை ஆதாயமாக்கிக் கொள்ள வேண்டும் என இந்த உவமைகள் கற்பிக்கின்றன.

இன்றைய நற்செய்தியில் புதையலையும் நல்முத்துவையும் தேடும் நபர் யார்? நானா அல்லது நீங்களா? புதையலையும் நல்முத்துவையும் கண்டுபிடித்தது யார்? அந்த புதையல் யார்? நல்முத்து யார்? அன்பர்களே, அந்த புதையலும் நல்முத்துவும் நீங்களும் நானும். தேடும் நபர் யார்? இயேசு கிறிஸ்து! மனிதனை மீட்பதற்காக அவரோ அரியணைத் துறந்து, மனுக்கோலம் பூண்டார். அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். நமக்காக சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு எல்லாவற்றையும் துறந்தார் (பிலி.2:7-8). முடியாது என உலகம் எண்ணுவதை செயலில் செய்து, நமக்குக் காட்டினார் இயேசு.

எனவே, நிலையான வாழ்வை வழங்கும் விண்ணகம் நோக்கி நமது பார்வையைச் செலுத்துவோம். இம்மை வாழ்வையை தாண்டி மறுமை வாழ்வை நோக்கி, நமது தேடல் பயணம் இருக்க வேண்டுமென்று இன்றைய நற்செய்தியில் இயேசு கிறிஸ்து கூறுகிறார். ஏனெனில், "நமக்கோ விண்ணகமே தாய்நாடு" (பிலி.3:20). அதுவே ஞானத்தின் நிறைவு.

அந்தோணி இன்னாசி சைபர்ஜெயா

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:
மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015